## 07. கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் வழங்குதல் - செயல்வழிப்படம்

டிஜிரல்மயப்படுத்தல் தரவுகளைப் பயன்படுத்தல்

இலத்திரனியல் தகவல்கள் /பரிவர்த்தனைகள் (SMS/WhatsApp/e-mail)

கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் வழங்குமாறு வேண்டுகோள் கடிதம், இணையத்தளம் ஊடாக அல்லது நேரடியாக முன்னலுவலகத்திடம் பொறுப்பேற்றல்

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

சபையிடம் அறவிடப்பட வேண்டிய பணம் நிலுவையாக உள்ளதா என்பது தொடர்பாக பரிசோதனை செய்து, அவ்வாறு ஏதேனும் பணத்தொகை இருப்பின் அந்தப் பணத்தொகை மற்றும் கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் வழங்கும் கட்டணம் செலுத்துமாறு விண்ணப்பத்தாரியை அறிவுறுத்தல்

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை இருப்பின், அதனுடன், கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் வழங்கும் கட்டணம் செலுத்தல்

பொறுப்பு: விண்ணப்பத்தாரி

உரிய பணத் தொகை அறவிடப்பட்டு பற்றுச்சீட்டு மற்றும் கையகப்படுத்தும் சான்றிதழ் வழங்குதல்

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

செயலாற்றுகை சுட்டி

## 07. கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் வழங்குதல்

### 1. அறிமுகம்

கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ், எவரேனுமொரு நபரால் தமது ஆதனத்தை ஈட்டில் அல்லது பிணையில் வைத்து கடன் தொகை விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில், கடன் வழங்கும் நிதி நிறுவனத்தால் மேற்கொள்கின்ற அறிவிப்புக்கமைவாக தேவைப்படுகின்றது. கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் என்பது ஏதேனும் அசையாத ஆதனமொன்றை சபையிடம் சுவீகரித்துக்கொள்வதற்கு ஏதுவாக அமைகின்ற நிலைமை ஏற்படவில்லை என்பதற்காக வழங்கப்படுகின்ற சான்றிதழாகும். சபைக்கு அறவிடப்பட வேண்டிய ஏதேனும் பணத் தொகையினை தவறவிடுகின்ற சந்தர்ப்பத்தில், ஏதேனும் அசையாத ஆதனமொன்றை சபையிடம் சுவீகரித்துக்கொள்ளப்படும். அந்த அசையாத ஆதனம் சபையிடம் சுவீகரித்துக்கொண்டு விற்பனை செய்வதனால் உரிய நிலுவை தொகை அறவிடப்படும். ஏதேனும் அபிவிருத்தி பணிக்காக காணிகளை சுவீகரித்துக்கொள்ளும் செயற்பாட்டுடன் ஏதேனுமொரு வகையிலான தொடர்பு இந்த சான்றிதழ் மூலம் வெளிப்படுத்தப்படுவதில்லை. இந்தச் சான்றிதழ் வழங்கிய திகதியிலிருந்து 06 மாத காலப்பகுதிக்கு மட்டும் இது செல்லுபடியாகும்.

**2. சட்டத்துடனான அதகிராரம்**

(அ) 252 ஆம் அதிகாரமான மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 252, 253, 255, 256, 257 மற்றும் 259 ஆவது பிரிவுகள்;

(ஆ) 255 அதிகாரமான நகர சபை கட்டளைச்சட்டத்தில் 166 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் 252, 253, 255, 256, 257 மற்றும் 259 ஆவது பிரிவுகள்;

(இ) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் 158, 159, 161, 162, 163, 164, 165 மற்றும் 166 பிரிவுகள்

**3. தகைமைகள்**

(அ) மதிப்பீட்டு அட்டவணையில் ஏற்புடைய ஆதனத்தின் சட்டரீதியான உரிமையாளராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர் இந்த விபரங்களை கோருவதற்கு உரித்துடையவராவார்.

(ஆ) ஆதனத்தின் சட்டரீதியான உரிமையல்லாத எவரேனுமொரு நபரால் இந்த விபரங்கள் கோருவதாக இருப்பின், சட்டரீதியான உரிமையாளரால் அதற்காக ஒரு ஆவணத்தால் அதிகாரம் கையளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) சான்றிதழ் கோருகின்ற திகதியில் சபையிடம் அறவிடப்பட வேண்டிய எல்லா பணத்தொகையும் செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருத்தல் வேண்டும்

**4. கட்டணங்கள்**

உள்ளூர் அதிகார சபையால் அவ்வப்போது தீர்மானிக்கின்ற வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்படுகின்ற கட்டணம் அறவிடப்படும்.

குறிப்பு: இதற்காக அறவிடப்படும் கட்டணம் நியாயமாதல் வேண்டும்.

## 5. வழங்கப்பட வேண்டிய ஆவணங்கள்

(அ) விண்ணப்பத்தாரி ஆதனத்தின் சட்டரீதியான உரிமையாளராயின், கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் தேவைப்படும் ஆதனத்தின் விபரங்கள் (ஆதனம் அமைந்துள்ள இடத்தின் முகவரி, மதிப்பீட்டு இலக்கம்) உள்ளடக்கிய கடிதம் மூலம் மேற்கொள்கின்ற கோரிக்கை;

(ஆ) விண்ணப்பத்தாரி ஆதனத்தின் சட்டரீதியான உரிமையாளராகதவிடத்து விண்ணப்பத்தாரியிடம் இந்த விபரங்கள் வழங்குவதில் எந்தவொரு எதிர்ப்பும் இல்லை எனவும், குறித்த விபரங்கள் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பத்தாரியிடம் அதிகாரம் கையளிக்கப்பட்டது எனவும் சட்டரீதியான உரிமையாளரால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட, சமாதான நீதவான் சான்றுப்படுத்திய கடிதம்.

## 6. விண்ணப்பிக்கும் திட்டம்

| திட்டம் | காலவெல்லை | அதிகாரம் |
|---|---|---|
| கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் கோரும் கடிதம் பொறுப்பேற்றல் | | முன்னலுவலக அலுவலர் |
| சபையிடம் அறவிடப்பட வேண்டிய பணம் நிலுவையாக உள்ளதா? என்பதை பரிசோதனை செய்து ஏதேனும் பணத்தொகை இருப்பின், அதனுடன் கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் வழங்கும் கட்டணம் செலுத்துமாறு விண்ணபத்தாரியை அறிவுறுத்தல் | விண்ணப்பம் கிடைத்த சந்தர்ப்பத்திலயே | முன்னலுவலக அலுவலர் |
| உரிய கொடுப்பனவுகளை அறவிடப்பட்டு பற்றுச்சீட்டு வழங்குதல் | விண்ணப்பம் கிடைத்த சந்தர்ப்பத்திலயே | முன்னலுவலக அலுவலர் |
| கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் வழங்குதல் | விண்ணப்பம் கிடைத்த சந்தர்ப்பத்திலயே | முன்னலுவலக அலுவலர் |

குறிப்பு: இங்கு இணைப்பின் படிவம் பிரகாரம் கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

இணைப்பு

எனது இலக்கம்: . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . சபை,
. . . . . . . . . . . . . . . . . .
20 . . . . . . . . . . . . . . . . திகதி

திரு/திருமதி/செல்வி. . . . . . . . . . . . . . . . . . . ,

அன்புடையீர்,

**<u>கையகப்படுத்தாமைக்கான சான்றிதழ்</u>**

20 . . . . . . . . . . . . .ஆம் திகதி தாங்கள் சமர்ப்பித்துள்ள கோரிக்கை கடிதத்துடன் தொடர்புடையதாகும்.

**02**. . . . . . . . . . . . . . . . சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பின்வரும் ஆதனம் பொருட்டு, 20 . . . . . . . . . . . ஆம் திகதி வரை, இந்த சபையிடம் செலுத்தப்பட வேண்டிய எல்லா வகையிலுமான மதிப்பீட்டு வரி மற்றும் ஏனைய எல்லா வரியும் செலுத்தி முடிவுறுத்தியுள்ளதால் 252 அதிகாரமான மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252, 253, 255, 256, 257 மற்றும் 259 ஆவது பிரிவுகள் / 255 அதிகாரமான நகரசபைக் கட்டளைச் சட்டத்தில் 166 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தில் 252, 253, 255, 256, 257 மற்றும் 259 ஆவது பிரிவுகள் / 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 158 ஆவது பிரிவு, 159, 162, 163 மற்றும் 166 ஆவது பிரிவுகள் * என்பவற்றின் கீழ் குறித்த ஆதனம் இந்த சபையிடம் கையகப்படுத்துவதற்கு செயற்படவில்லை என்பதை இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

1. காணியின் அமைவு (முகவரி): . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

2. மதிப்பீட்டு வரி இலக்கம்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . (வீதியின் பெயருடன் மதிப்பீட்டு இலக்கம்) . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

**03**. இந்தச் சான்றிதழ் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக வழங்கப்படும்.

1. வீதி விஸ்தரித்தல் அல்லது வேறேதேனும் தேவைகளின் மீது காணி சுவீகரித்தல் சட்டத்தின்கீழ் மேற்கொள்கின்ற சுவீகரித்தல், இந்த சான்றிதழில் உள்ளடங்காது.
2. இந்த சான்றிதழ் வழங்கிய திகதி தொடக்கம் 06 மாத காலப்பகுதிக்கு மட்டும் செல்லுபடியாகும்.)

இங்ஙனம்,

விசுவாசமுள்ள,

QR Code

. . . . . . . . . . (பெயர்) . . . . . . . . . .

முன்னலுவலக அலுவலர்

கணக்காளர் / செயலாளருக்குப் பதிலாக

. . . . . . . . . . . . . . . . . .சபை

(பதவி முத்திரை)